# செய்யுள் திரட்டு

## தமிழ் இளநிலைப் பகுதி – 1



தமிழாய்வுத் துறை
மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி (தன்னாட்சி)
புதுக்கோட்டை – 622 001.

# பாடத்திட்டம்

## முதற்பருவம்

### அலகு - 1

1. பாரதியார் -1. தமிழ்த்தாய்
   -2. வந்தேமாதரம்
2. பாரதிதாசன் -1. அழகு
   -2. தோழனே உன்னிடம் சொல்வேன்
3. கவிஞர் முடியரசன் -1. தலைமை வகிப்போம்
4. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் -1. மனிதனாக வாழ்ந்திட வேணும்

### அலகு - 2

5. கண்ணதாசன்- 1. நீ மணி; நான் ஒலி!
6. நா. காமராசன்- 1. காகிதப் பூக்கள்
7. மீரா - 1. எதிரொலி
   2. கடமையைச் செய்
8. கந்தர்வன்- 1. புதியகல்வி
9. அப்துல் ரகுமான்- 1. கனவு
10. வைரமுத்து- 1. எப்போது உருப்படும் இந்த தேசம்

### அலகு - 3

உரைநடை

### அலகு - 4

இலக்கணம்

1. எழுத்து-
   1. உயிரெழுத்து (குறில், நெடில், மாத்திரை)
   2. மெய்யெழுத்து-
   (1. வல்லினம். 2.மெல்லினம், 3. இடையினம்)
   3. சார்பெழுத்துக்கள்
2. தொடர்ப்பிழைநீக்கம்
   ண, ந, ன வேறுபாடு
   ர, ற வேறுபாடு
   ல, ழ, ள வேறுபாடு
3. வல்லினம் மிகும், மிகா இடங்கள்

### அலகு - 5

இலக்கிய வரலாறு

பாரதியார், பாரதிதாசன், கவிஞர் முடியரசன், பட்டுக்கோட்டை, கண்ணதாசன், புதுக்கவிதைக் கவிஞர்கள், உரைநடை இலக்கியம்.

## 1. கவிதை - மரபுக்கவிதை

### பாரதியார்

- இயற்பெயர் சுப்பிரமணியம் - சுப்பையா என அழைக்கப்பட்டார்
- பெற்றோர்: சின்னசாமி ஐயர் - லட்சுமி அம்மாள்
- ஊர் : எட்டயபுரம்
- வாழ்நாள்: 11.12.1882 முதல் 11.9.1921 வரை 39 ஆண்டுகள்
- எட்டயபுர சமஸ்தானப் புலவர்கள் 'பாரதி' என்ற பட்டம் அளித்தனர்
- அறிவில் சிறந்த இல்லறத்தார்க்குக் கொடுக்கப்படும் பட்டம் பாரதி
- ஞானத்தில் உயர்ந்த துறவிகளுக்குக் கொடுக்கப்படும் பட்டம் சரஸ்வதி
- பாரதி, சரஸ்வதி இரண்டுமே கலைமகளின் வேறு பெயர்கள்
- தன்னை 'ஷெல்லிதாசன்' என்று அழைத்துக்கொண்டார்
- புனைபெயர்கள்: காளிதாசன், சக்திதாசன், சாவித்திரி, ஓர் உத்தம தேசாபிமானி, நித்திய தீரர், ஷெல்லிதாசன்
- தம் பூணூலை கனகலிங்கம் என்ற ஆதி திராவிடர்க்கு அளித்தவர்
- புதுக்கவிதைக்கு முன்னோடி
- பாரதியின் புதுக்கவிதை முன்னோடி வால்ட் விட்மன்
- தம் பாடல்களுக்குத் தாமே மெட்டு அமைத்த கவிஞர்
- கவிதையில் சுயசரிதம் எழுதிய முதல் கவிஞர்
- 1905இல் சக்கரவர்த்தினி என்ற இதழ் தொடங்கினார்
- கர்மயோகி, பாலபாரத், (ஆங்கில இதழ்) ஆகியவற்றை நடத்தினார்
- சுதேசி மித்திரன் என்ற இதழின் துணையாசிரியர்
- 'இந்தியா' என்ற இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார்

மகாகவி, தேசியகவி, [illegible].

சென்னை ஜனசங்கம் என்ற அமைப்பைத் தோற்றுவித்தவர் பாரதி

நிவேதா தேவியைச் சந்தித்தபின் பாரதி தீவிரவாதியானார்

பல மொழிகளில் நல்ல புலமை பெற்றவர்

பாரதியின் முக்கிய நண்பர்கள்; பரலி நெல்லையப்பர் (தம்பி என்று பாரதியால் அழைக்கப்பட்டவர்) வ.ரா.,பாரதிதாசன்.

**பாடியவை**

சுதந்திரப் பாடல்கள், தேசியப் பாடல்கள், தலைவர் வாழ்த்துக்கள், பக்திப் பாடல்கள், சமூகப் பாடல்கள், பாப்பாப் பாட்டு, புதிய ஆத்திசூடி, முப்பெரும் பாடல்கள், வசன கவிதை

முப்பெரும் பாடல்கள் என்பன:

1. கண்ணன் பாட்டு 2. குயில் பாட்டு 3. பாஞ்சாலி சபதம்

புதுவையில் இருக்கும்போது எழுதியது குயில் பாட்டு

பாஞ்சலி சபதம் ஒரு கண்ட காவியம்

ஒரு பெருங்காவியத்தில் வரும் ஒரு கிளைக் கதையைத் தனிக் காவியமாகப் பாடுவது கண்டகாவியம் எனப்படும். கண்டம் – துண்டு

வசன கவிதை 'காட்சி' என்ற தலைப்புடையது

பாரதியார் பாடல்களை முதன் முதலில் மக்களுக்கு அறிமுகம் செய்தவர் பரலி சு. நெல்லையப்பர்

பாரதியார் பாடல்களை முதன் முதலில் வெளியிட்டவர் கிருஷ்ணசாமி ஐயர்

பாரதி பாடல்களை ஏ.வி.மெய்யப்பச் செட்டியாரிடமிருந்து வாங்கி நாட்டுடைமையாக்கியவர் ஓமந்தூர் பி. ராமசாமி ரெட்டியார்

தற்போது புகழ்பெற்று விளங்கும் பாரதியின் படத்தை வரைந்தவர் ஆர்ய என்ற பாஷ்யம்

- பாரதிக்கு 'மகாகவி' என்ற பட்டம் கொடுத்தவர் வ.ரா. (ராமசாமி ஐயங்கார்)
- பாரதி சங்கத்தைத் தோற்றுவித்தவர் கல்கி.

மேற்கோள்

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்"

"மேதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

"சொல்லில் உயர்வு தமிழச் சொல்லே - அதைத்
தொழுது படித்திடடி பாப்பா"

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புது நூல்கள் இயற்றல் வேண்டும்"

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள்
யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்"

"மாதர்தம்மை இழிவு செய்யும் மடமையைக்
கொளுத்துவோம்"

"ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே"

"ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லை
சாதியில்"

"வாழிய பாரத மணித்திருநாடு"

"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல்"

"எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்"

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு- நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு"

"பள்ளித்தலம் அனைத்தும் கோயில் செய்குவோம்"

"புண்ணியங்கோடி ஆங்கோர்
ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாம்"

"மனதில் உறுதிவேண்டும்
வாக்கினில் இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்"

"பக்தி செய்வீர் செகத்தீரே பயனுண்டு பக்தியாலே"
"காதல் காதல் காதல்
காதல் போயின் காதல் போயின்
சாதல் சாதல் சாதல்"
"பாட்டினில் நெஞ்சைப் பறிகொடுத்த பாவியேன்"
"பாட்டினைப் போல் ஆச்சரியம்
பாரின்மிசை இல்லையடா"
"தனிஒருவனுக்கு உணவுஇல்லை எனில் இச்
சகத்தினை அழித்திடுவோம்"
"காக்கை குருவி எங்கள் சாதி – நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்"
"செப்புமொழி பதினெட்டு உடையாள் – எனில்
சிந்தனை ஒன்றுடையாள்"
"என்று தோன்றியவள் என்று உணர
முடியாதவளாம் எங்கள் தாய்" (பாரதத் தாய்)
"தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடியும் வெல்லும்"
"கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்"
"செந்தமிழ் நாடெனும் போதினிலே..."
"சிந்து நதியின் மிசை..."
"ஊண்மிக விரும்பு" "தையலைப் போற்று"
"சீறுவார் சீறு"

புகழுரைகள்

- "பாரதியார் ஒரு அவதார புருஷர், இவர் நூலைத் தமிழர் வேதமாகக் கொள்வார்களாக" – பரலி சு. நெல்லையப்பர்
- "பாரதியை நினைத்திட்டாலும் சுதந்திரத்தின் ஆவேசம் சுருக்கென்று ஏறும்; இந்தியன் நான் என்றிடும் நல் இறுமாப்பு உண்டாம்" – நாமக்கல் கவிஞர்

"பைந்தமிழ்த் தேர்ப்பாகன்
செந்தமிழ்த் தேனி
சிந்துக்குத் தந்தை
குவிக்கும் கவிதைக் குயில்

# தமிழ்த்தாய்

புதிய விஞ்ஞான சாஸ்திரங்களையும் மேல் நாட்டுக் கலைகளையும் தமிழில் சொல்ல முடியாது எழுத முடியாது என்று இப்பொழுது சிலர் சொல்லி வருகிறார்கள். அவர்களைக் கண்டுதான் பாரதியார் 'தமிழ்த்தாய்' என்ற இப்பாடலை அமைத்திருக்கிறார். ஆதி மொழியாயிருந்த தமிழ் இன்றும் இளமை குன்றாதிருக்கின்றது. எத்தனையோ மொழிகள் உலகில் தோன்றி மறைந்து விட்டன. நந்தமிழோ தன் மணம் குன்றாது இன்றும் வாழ்கின்றது. ஆகையினால் உலகில் உள்ள எல்லா விதமான சாஸ்திரங்களும் தமிழ்மொழி-யிலும் இருக்க வேண்டும். அவற்றைத் தமிழில் சொல்ல முடியாதென்ற இழிவினைத் துடைக்கத் தமிழ் மக்கள் முன் வரவேண்டும் என்று உணர்ச்சியூட்டுகிறார் பாரதியார். தமிழ் மகளே தன் மக்களைப் பார்த்துப் பேசுவது போல அமைந்துள்ளது பாடல்.

ஆதிசிவன் என்னைப் பெற்று இத்தரணி மீது விட்டிருந்தான். அகத்தியன் என்ற தவமுனிவன் என் அழகைக் கண்டு மகிழ்ந்து எனக்கு நிறைவு தரும் இலக்கணத்தைச் செய்து தந்தான்.

சேர, சோழ, பாண்டியர் என்ற முடிமன்னர் மூவரும் என்னை ஏந்தி வளர்த்தனர். அவர்கள் என்மீது கொண்ட தணியாத அன்பினால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நான் வளர்ந்தேன். அந்த ஆதி நாளில் ஆரியம் என்ற வடமொழிக்கு நிகராக நான் தென் நாட்டில் வளர்ந்தேன்.

மதியோ, தீயோ, காற்றோ, வானவெளியோ என்று உள்ளத்தை அள்ளும் தீஞ்சுவை காவியங்களைச் செய்து என்னை மேலும் மேலும் அழகு செய்தார்கள் தமிழ்ப் புலவர்கள்.

இலக்கியங்கள் மாத்திரமா? பலவிதமான சாத்திரங்களை
கூட இயற்றி என்னை உயர்வாக வைத்திருந்தார்கள்.
அதனால் இப்பூவுலகம் முழுவதும் என்னைப் போற்றிப்
புகழ்ந்தது. நானும் பெருமையோடு வாழ்ந்தேன். ஆனால்
அந்தோ! அந்தக் காலன் தான் கண் கெட்டவனன்றோ?
தன் முன்னே எது வாழ்கிறதோ அதைச் சிதைத்து அழிப்பது தானே
அவன் வேலை.

இது நல்லது, இது தீயது என்று பார்க்கும் வழக்கந்தான்
அவனிடமில்லையே, பாய்ந்து வரும் காட்டாற்று வெள்ளம்
போலத் தன் வழியில் எது எதிர்ப்பட்டாலும் அதனை வாரிச்
சுருட்டி அள்ளிக்கொண்டு, பூமியின் செல்வம் அனைத்தையும்
கொன்று அழித்து விட்டுப் போய்விடுகிறான்.

பண்டு, என் கன்னிப் பருவத்திலே, நான் கேள்விப்பட்ட
திசைமொழிகள் பலப்பல. அந்த அயல் நாட்டு மொழிகளுக்கு
என்னென்னவோ பெயர்கள் சொன்னார்கள். அவையாவும்,
எனக்கு நிகராக வாழ்ந்த ஆரியம் தானும்), அழிந்தொழிந்து
மாண்டு போயின.

என் தந்தை அருளின் திறத்தாலும் முன்னைக்
காலத்திலிருந்த அறிவுத்துறை போகிய புலவர்கள்
செய்த தவ வலியாலும் இந்தக் கணம் வரையில் அந்தக்
கூற்றுவன் என்னை எட்டிப் பார்க்கத் தானும் அஞ்சி
இருந்தான். நானும் சிறப்புடனே வாழ்ந்தேன்.

ஆனால் இன்று ஒரு சொல் என் காதில்
விழுந்தது. அது கேட்ட நேரமே என் உயிர் பிரிந்துவிடும்
போல் இருக்கிறது. என் ஆருயிர் மக்களே! இனி
நான் ஏது செய்வேன். சொல்லத் தகாதவன் ஒருவன்
அன்றோ. அவ்வார்த்தையைக் கூறிவிட்டான் பாவி!

புதியதாகத் தோன்றியுள்ள கலைகள் பல
பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்களைக் கூறுகின்றன.

(பௌதிகம், விஞ்ஞானம், ரசாயனம்) முதலிய அந்தக் கலைகள் மேல் நாட்டினில் பல்கிப் பெருகி வளருகின்றன. இந்த மேன்மையான கலைகள் தமிழ் மொழியில் இல்லை.

"தமிழில் அப்படியான கலைஞானங்களைச் சொல்லவும் முடிவதில்லை. சொல்லும் திறமைதானும் தமிழ் மொழிக்குக் கிடையாது. (மேல்நாட்டு மொழிகளைப் போல - முக்கியமாக ஆங்கிலத்தைப் போல - திறமை, அமைதி, சொற் சிக்கனம் முதலியன தமிழ் மொழியில் இல்லை). அந்தக் கலைகளை உடைய மேல்நாட்டு மொழிகள் தாம் இனி உலகின் ஓங்கி வளரும். தமிழ் மெல்ல மெல்ல இனிச் சாக வேண்டியதுதான்

ஆ! இப்படியல்லவா அந்த அறிவில்லாத பதிதன் கூறினான். இந்த வசை எனக்கு ஏற்படலாமா? மக்களே, எட்டுத் திக்கும் செல்லுங்கள். ஆங்காங்கு காணப்படும் செல்வங்கள் எல்லாவற்றையும் இங்கே கொண்டு வந்து இறையுங்கள்!

என் தந்தையின் அருள் வலிமை இன்னும் குன்றாதிருக்கின்றது. புதியன என்று சொல்லப்படும் விஞ்ஞானம் முதலிய கலைகளில் உங்களில் பலர் வல்லுநராக இருக்கிறார்கள். உங்கள் தவவலியும் எனக்கு உண்டு. நீங்கள் முயற்சி செய்தால் இந்தப் பெரும்பழி தீரும். நானும் (என் மக்களாகிய உங்கள் தீராத முயற்சியின் பயனாய்) புகழ்பெற்று மீண்டும் பூமியில் தலைசிறந்து வாழ்வேன்.

## வந்தே மாதரம்

## 2. நாட்டு வணக்கம்

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

என்று பாரதியார் பாடியிருக்கிறார். வானுலகம் இன்பத்திற்குரியது. அவ்வின்பத்தைத் தவஞ் செய்து பெற வேண்டும். அத்தவத்தால் பெற்ற வானுலக இன்பத்தை விடச் சிறந்தவள் தன்னைப் பெற்றெடுத்த தாய். அத்தாய்க்கு நிகராக மற்றொன்றுண்டா? உண்டு. அதுதான், தான் பிறந்த நாடு. அதனால்தான் தான் பிறந்த நாடு, தாய்நாடு எனவும் தாயகம் எனவும் மொழியப்படுகிறது. அதனால் ஒருவன் தன் தாயை எவ்வாறு மதித்துப் போற்றி வணங்கிக் காக்கின்றானோ அதைப் போலவே, தன் தாயகத்தையும் மதிக்க வேண்டும். போற்ற வேண்டும். வணங்க வேண்டும். தாயகத்தை வணங்குவதற்கும், மதித்துப் போற்றுவதற்கும் காரணம் என்ன? என்ற வினாவிற்குக் கவியரசர் பாரதியார் தரும் விடையே நாட்டு வணக்கப் பாடல்.

நாம் பிறந்த நாடு தமிழகமாயினும் பாரதியார் கண்ட நாடு பாரத நாடு. அவர்தம் தேசியப் பார்வையில் விரிந்தது. தமிழகத்தையும் பிற பகுதிகளையும் பாரதப் பெரு நாட்டின் அகப் பகுதிகளாகவே நோக்கினார். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மரபுவழி வந்த தமிழ் மகனிடம் குறுகிய நோக்கு எங்ஙனம் முகிழ்க்கும்! பாரத நாடு முழுவதும் அடிமைப்பட்டிருந்த நிலையில் தமிழக விடுதலையை மட்டிலும் பிரித்துப் பாடும் இழிவு அவர் பாடல்களில் இருக்க முடியுமா? எனவே, விரிந்த மன நிலையைக் கொண்ட அவர் பாரதத்தைப் பாரத மாதாவாகவே - இந்தியத் தாயாகவே காண்கின்றார்.

நம் வாழ்வு இந்த நாட்டோடு எவ்வாறு இணைந்து நம் உணர்வுகள் எவ்வாறு பிணைந்து அமைந்திருக்கின்றன என்பதை நாட்டு வணக்கப் பாடலில் நன்கு காட்டி நாட்டுக்கும் நமக்கும் உள்ள உறவைத் தெளிவுப் படுத்துகின்றார்.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து

முடிந்ததும் இந்நாடே"

என்று நாட்டுக்கும் நமக்கும் உள்ள உறவின் பழமையையும் பழக்கத்தையும் நன்கு காட்டுகின்றார்.

நாம் பிறந்து வளர்ந்ததும் நம்மைப் பெற்ற தாயார் தோன்றி வளர்ந்து மழலைகள் பேசிக் கன்னியராகிக் களித்து மகிழ்ந்ததும் இந்நாடே என்று கூறி, நாம் மட்டும் அல்ல நம் அன்னையரும் அவர் முன்னையரும் வாழ்ந்ததும் இந்நாடு என்பதை உணர்த்துகின்றார்.

"இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்து அருள்
ஈந்ததும் இந்நாடே - எங்கள் அன்னையர் தோன்றி
மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே - அவர்
கன்னியராகி நிலவினிலாடிக்
களித்ததும் இந்நாடே."

என்று, நாட்டுக்கும் நமக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைத் தம் பாட்டுத் திறத்தால் இசைத்துக் காட்டுகின்றார்.

## பாரதிதாசன்

- இயற்பெயர் சுப்புரத்தினம்
- பெற்றோர்: கனகசபை – லட்சுமி
- ஊர் புதுச்சேரி
- வாழ்நாள் 29.4.1891 முதல் 21.4.1964 வரை 73 வயது
- 16 வயதில் புதுவை அரசினர் கல்லூரியில் பேராசிரியர் பணியில் சேர்ந்தார்
- 1938 இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்
- புதுவையில் பாரதியின் கட்டளைக்கிணங்கப் பாடியது
  "எங்கெங்கு காணினும் சக்தியடா – தம்பி
  ஏழுகடல் அவள் வுண்ணமடா"
  என்ற பாடல். இதனைப் பாரதி "ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது" எனக் குறிப்பிட்டுச் சுதேசமித்திரன் இதழுக்கு அனுப்பினார்.

## நூல்கள்

- பாரதிதாசன் கவிதை தொகுப்பு 1, 2, 3
  இசைஅமுது தொகுதி 1, 2
  பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், சேரதாண்டவம்,

அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு, குறிஞ்சித்திட்டு, கண்ணகி, புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா, காதல் நினைவுகள், கழைக்கூத்தியின் காதல், தமிழச்சியின் கத்தி, அமைதி, இளைஞர் இலக்கியம், சௌமியன், நல்ல தீர்ப்பு, தமிழ் இயக்கம், இரண்யன் அல்லது இணையற்ற வீரன், காதலா கடமையா?, சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

- பொதுவுடைமையை வலியுறுத்துவது சஞ்சீவி பர்வதத்தின் சாரல்
- இயற்கையை வருணிப்பது அழகின் சிரிப்பு
- கற்ற பெண்களின் சிறப்பைக் கூறுவது குடும்ப விளக்கு
- கல்லாத பெண்களின் இழிவைக் கூறுவது இருண்ட வீடு
- பில்கணியத்தின் தழுவல் புரட்சிக் காப்பியம்
- இவர் உரை எழுதிய நூல் திருக்குறள்
- நடத்திய இதழ் ‘குயில்’

## மேற்கோள்

“நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
 நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை
கோலம் முழுவதும் காட்டிவிட்டால் காதற்
 கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ?”

"மண்ணாய்ப் போக மண்ணாய்ப் போக
"மண்ணாய்ப் போக மண்ணாய்ப் போக
மனம்பொருந்தா மணம் மண்ணாய்ப் போகவே"
"காதல் இருவர்தம் கருத்தொருமித்தபின்
வாதுகள் வம்புகள் ஏன்? இதில் மற்றவர்க்கு என்ன
உண்டு"

"தமிழுக்கும் அமுதென்று பேர்- இன்பத்
தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"
"தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடாதே"
"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"
"உணர்ந்திடுக
தமிழ்த் தாய்க்கு வரும் தீமை உனக்கு வரும் தீமையன்றோ
ஒண்தமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம்
ஒவ்வொன்றும் உன் முன்னேற்றம்"
"ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால், ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆகிவிடுவார் உணரப்பா நீ"
"நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்"
"தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை"
"கொலை வாளினை எடடா - மிகு
கொடியோர் செயல் அறவே"
"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே"
"முத்தமிழ் நாட்டு மானம் பெரிதன்றி
மூச்சுப் பெரிதில்லை காண்"
"மங்கை ஒருத்தி தரும் சுகம் - எங்கள்
மாத்தமிழுக்கு ஈடில்லை"
"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை - எமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை"
"கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே - இங்கு
வேரில் பழுத்த பலா"

"தலைவாரி பூச்சூடி உன்னைப் பாடச்
சாலைக்குப் போவென்று சொன்னாள் உன் அன்னை"
"துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா?"
"தமிழ் ஆய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின்
முதலமைச்சாய் வருதல் வேண்டும்"

## புகழுரைகள்

- "அறிவுக் கோயிலைக் கட்டி அதில் நம்மைக் குடியேற்ற விரும்புகின்ற பேரறிஞன்"– புதுமைப்பித்தன்
- "பாரதிக்குப் பிறகு தமிழ்நாட்டில் ஓர் உண்மையான கவி" – கு.ப. ரா.
- "அவர்தம் பாடல்களைப் படிக்கின்ற அன்னியனும் தமிழனாகி விடுவான்" – அ. சிதம்பரநாத செட்டியார்

# பாரதிதாசன் - அழகு

பாவேந்தர் பாரதிதாசன் கடல், தென்றல், காடு, குன்றம், ஆறு, செந்தாமரை, ஞாயிறு, வான், மாதர்கள், கிளி, இருள், சிற்றூர், பட்டணம், தமிழ் ஆகிய ஒவ்வொன்றிலும் அழகு சிரிக்கும் அனுபவத்தை அழகின் சிரிப்பாகப் பாடியுள்ளார். அதற்கு முன் அழகு என்றால் என்ன? என்பதற்கு விளக்கம் அளிப்பது போல முதல் கவிதை அமைந்துள்ளது.

1. பாவேந்தர் அழகை ஒரு பெண்ணாக உருவகம் செய்கின்றார். காலையில் தோன்றக்கூடிய இளம் கதிரவனின் அழகைக் கண்டேன். கடற்பரப்பில் அழகைக் கண்டேன். அங்கு தோன்றும் ஒளிப்புனலின் அழகைக் கண்டேன். சோலையில் அழகைக் கண்டேன் மலர்களின் அழகைக் கண்டேன். தளிர்களின் அழகைக் கண்டேன். இவ்வாறு பார்க்கக்கூடிய ஒவ்வொரு பொருளிலும் அழகைக் கண்டேன். மாலையில் மேற்கு திசையில் மறைகின்ற கதிரவனின் மாணிக்கச் சுடரில் அழகு இருந்தாள். அங்கெங்கும் ஆலமரங்கள் நிறைந்த சாலையில் அழகு இருந்தாள். ஆலமரத்தின் கிளைகள் தோறும் உள்ள கிளிக் கூட்டங்களில் அழகு ஒரு கவிதை போல இருந்து மகிழ்ச்சி தந்தாள்.

2. அழகு, சின்னஞ்சிறு குழந்தையின் விழிகளில் ஒளியாய் நின்றது. விளக்கில் சுடராகச் சிரிக்கின்றாள். நானத்தின் நரம்பைத் தொடுப்பவனின் விரல் வளைவில் நடமாக விளங்குகின்றாள். தோளில் கலப்பையுடன் செல்லும் உழவனின் புதுநடையில் தெரிகின்றாள். விளைந்த நன்செய் நிலத்தில் என் விழியைப் புகும்போதா வண்ணம் நிறுத்துகின்றாள்

இத்தகைய அழகுப் பெண்ணாள் என் நெஞ்சத்தில் இறவாத மகிழ்ச்சியை விளைவித்தாள்.

9. திங்களைக் கண்டேன், வானைக் கண்டேன். இவற்றின் உட்புறத்தில் தெரிந்த பலப்பல காட்சிகளையும் கண்டேன். எங்கும் அசைவனவற்றையும் கண்டேன். நின்றனவற்றையும் கண்டேன். இவை எல்லாவற்றிலும் அழகைக் கண்டேன். அவ்வழகு தரும் நல்ல இன்பத்தைக் கண்டேன். அழகு, அனைத்துப் பொருள்களில் இளமையாக விளங்குகின்றாள். இவள் காலம் எல்லாம் தோன்றிய பொழுதே தோன்றியவள். காலத்தால் பழமையானவள். இருந்தாலும் அன்று இருந்த இன்ப நிலை சாகாது இளமையோடு இருப்பவள். இத்தகைய அழகு, விருப்பத்தோடு பார்ப்பவர்களுக்கு கண்களுக்கு மட்டுமே புலப்படுவாள். விருப்பத்தோடு நோக்கினால் எங்கும் காணலாம். அழகு வசப்பட்டால் துன்பம் நீங்கும். இன்பம் பெருகும்.

இதுவரை, பாவேந்தர் 'அழகு' என்பதற்கு வரையறை கூறியுள்ளார். அழகு என்பது காணும் பொருளில் இல்லை; காண்போர் உள்ளத்திலேயே உள்ளது. விருப்பத்தோடு காணும் பொழுது எல்லாவற்றிலும் அழகைக் காணலாம் என்பது அவர் தரும் வரையறையாகும்.

தோழனே! உன்னிடம் சொல்வேன்! கவிதை!
உணர்த்தும் கருத்தை விவரிக்க.

பாரதிதாசன் - அறிமுகம்

பாரதிதாசன் 29.4.1891 ஆம் நாள் புதுச்சேரியில் பிறந்து, பெரும் புகழ் படைத்த பாவலர். இவருடைய இயற்பெயர் கனகசுப்புரத்தினம். தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர் சுப்பிரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால் பாரதிதாசன் என்று தம் பெயரை மாற்றிக்கொண்டார்.

இவர் இக்கவிதையின் வாயிலாக இளம் படைப்பாளர்களுக்குச் சில அறிவுரைகளைக் கூறியுள்ளார்.

அலையடிக்கும் இனிமை:

அமிழ்தம் என்ற சொல் இனிமையைக் குறிக்கும். அந்த இனிமை செந்தேன், கரும்பு, மா, பலா, வாழை என்ற முப்பழங்களிலும் தோன்றும் என்று பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார். ஆண்கள் நிலத்தை உழுது, விளைவித்த நெல்மணிகளைக் கற்புடைய பெண்கள் அரிசியாக்கி பாலில் இட்டு நெய்யும் வெல்லமும் சேர்த்து ஏலமும் பருப்பும் இட்டு அதை அன்போடு இலையில் வைக்கும் போது பொங்கலின் இனிமை அலையடிக்கும். இதனை பாவேந்தர் பின்வரும் வரிகளில் கூறியுள்ளார்.

"தூய பாரதி தமிழ்ப்பண் தனிலே
இந்திய அரசி பாடிச் செழுமைப்
புத்தருக்கு நெய்யும் வெல்லமும் முசுறு
ஊழியும் பருப்பும் நலம் மணக்கத்
தேனூற்றிட்ட பழத்தோடும் அன்போடும்
இழைபிலிட்ட பொங்கலின் இனிமை
அடையாதக்கும்!"

புதுக்கருத்து:

பெரிய திரைப்படத்திற்கு கதை, வசனம், திரைக்கதை எழுதும் படைப்பாளனே! நீ உன் மனதை உறுதியாய் தோண்டினால் அதிலிருந்து புதுக்கருத்துக்கள் வெள்ளம் போல் விரைந்து பாய்ந்து வரும் என்று பாவேந்தர் குறிப்பிட்டுள்ளார்.

"நீயே எண்ணி நீயே எழுதுக!
உள்ள மதனை உறுதியால் தோண்டினால்
வெள்ளப் புதுக்கருத்து விரைந்து பாயும்".

அறிவுரைகள்:-

பிறர் எழுதிய பாட்டின் அடியைத் திருடாதே! பிறர் எழுதிய பாட்டிலிருந்து சொற்களைத் திருடாதே! பிறரின் கருத்துக்களைத் திருடி அவற்றை உன் கருத்தாக எழுதாதே! பிறரின் பேச்சினைக் கேட்டு அவற்றிலிருந்து நல்ல சொற்களை எடுத்து அவற்றை உன் சொல்லாகக் கூறாதே! இவ்வாறு நீளத் திரைப்படம்

திரைப்படம் எனும் கோணத்தில் பாரதிதாசன்
அறிவுரை வழங்கியுள்ளார்.

"அயலார் பாட்டின் அழகைத் தொடாதே
அயலார் பாட்டின் சில சொல் அகற்றி
உன் பாட்டென்று உரைக்க வேண்டாம்
பிறரின் கருத்தைப் பெயர்த்தெழுதாதே
பிறரின் பேச்சின் சொல் தொட வேண்டாம்"

<u>நம்மை மதிக்க மாட்டார்கள்</u>:

"அழகைத் திருடச் சொல்லைத் திருடிப்
பிழைத்த வழக்கம் அயலார் படைத்த
கலையே திருடும் நோயும் இனத்தே!"

இவ்வாறு செய்தால், பிற மாநிலத்தவர்கள் தமிழகத்தை மதிக்க மாட்டார்கள் என்று பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார்.

## முடியரசன்

- வாழ்நாள் : 1920 – 1998
- இயற்பெயர் துரைராஜ்
- திராவிட இயக்கக் கவிஞர்

## நூல்கள்

- முடியரசன் கவிதைகள், காப்பியப் பாவை, பூங்கொடி (தமிழ் இயக்கப் போராட்ட வரலாறு)
- நாடகம்: ஊன்றுகோல் (பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் பற்றியது)

## மேற்கோள்

“வயலுக்கு வரப்பொன்றும் வேண்டாம் என்றால்
வளக்கரைகள் ஆற்றுக்கு வேண்டாம்என்றால்
இயல்மொழிக்கு இலக்கணம் வேண்டாம் பெண்ணே”
“மொழி காக்கும் வரம்பில்லையேல்
எம்மொழியும் அழிந்து போகும்”
“மணவினையில் தமிழுண்டா, பயின்றவர் தம்முள்
வாய்ப்பேச்சில் தமிழுண்டா, மாண்டபின்னர்
பிணவினையில் தமிழுண்டா”

வினா 3: கவிஞர் முடியரசன்

## தனியுடைமை ஒழிப்போம்!

கவிஞரின் தனியுடைமை ஒழிப்போம் என்ற தலைப்பில் கூறும் பொதுவுடைமைக் கருத்துக்களைக் கூறுக.

### விடை

#### விளக்கவுரை

பிறரின் உழைப்பினைச் சுரண்டுபவர்களையும் உற்பத்திப் பொருட்களை அதிக விலைக்கு விற்க நினைத்து அவற்றைப் பதுக்கிவைத்துச் செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்குபவர்களையும் அவர்களுக்குத் துணையாக இருப்போரையும் பழித்துரைக்க வேண்டும். அத்தகையோரின் செயல்களைத் தவிர்க்கும் வகையில் விதிமுறைகளை வகுக்க வேண்டும் என்று கவிஞர் குறிப்பிட்டுள்ளார்.

#### மதிக்க வேண்டியவையும் மிதிக்க வேண்டியவையும்

கவிஞர் முடியரசன், மனித உழைப்பினை மதிக்க வேண்டும் என்றும் கொடுமையான வறுமையை மிதித்து அழிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

"மனிதனை உழைப்பினை மதிப்போம் - கொ
வறுமையை இடரினை மிதிப்போம்
இனிய நல் உலகினைப் படைப்போம்"

## மறுக்க வேண்டியனவும் வெறுக்க வேண்டியனவும்.

பணக்காரர், ஏழை என்ற ஏற்றத்தாழ்வுகள் உலகில் இருக்கும் என்ற இத்தகைய வேறுபாட்டிற்கு காரணம் கடவுளின் செயல்தான் என்று மேட்டுக்குடியினர் கூறுவார்கள் என்று கவிஞர் குறிப்பிடுகின்றார்.

"கடவுளை விதியினை மறுப்போம் - தூய
கடமையை உரிமையை மதிப்போம்
மடமையை அடிமையை வெறுப்போம் - நல்ல
மதியினை உணர்வினை வளர்ப்போம்"

ஏழை - பணக்காரன் என்ற வேறுபாட்டை, அடிமைத்தனத்தை வெறுக்க வேண்டும் என்கிறார்.

## நோக்க வேண்டியனவும் எடுக்க வேண்டியனவும்:

"வயல்களில் உழைப்பினைக் கொடுப்போம் - அங்கே
விளைபயன் அனைத்தையும் எடுப்போம்
துயரினை அறவே விடுப்போம் - உழைப்பால்
சிறந்திடும் பொருள்களை மடுப்போம்"

## பொதுவுடைமையில் நாடு செழித்தல்:

பொருட்களை உற்பத்தி செய்யும் புதிய எந்திரங்களையும் துணி நெய்யும் தறிகளையும்

உருவாக்கி பயன்படுத்த வேண்டும். அதில் நேர்மையோடு உழைக்க வேண்டும். அதன் மூலமாக நாட்டின் நிலையை வளப்படுத்த உயரச் செய்ய வேண்டும் என்று கவிஞர் குறிப்பிடுகிறார்.

"புதியதோர் உலகைப் படைப்போம் - அங்கே
பொதுமையில் அறநெறி விதிப்போம்
உதவிடும் மனத்தோடு சிறப்போம் - உலகில்
ஒரு சரித்திரத்தை இயம்புவோம்"

என்ற புதிய முறையில் உலகினை உருவாக்க வேண்டும் என்றும் அந்தப் புதிய உலகில் பொதுவுடைமை என்ற அறநெறியை விதிக்க வேண்டும் என்கிறார்.

நாம் உலகில் அனைவரும் சரிசமம் என்ற நிலையில் வாழ்வோம் என்று கவிஞர் குறிப்பிட்டுள்ளார்.

<u>தலைமை வகிப்போம்!</u>

நம் உடல் அடையும் சோர்வே நமது பகை என்று நினைத்து அதனைத் தகர்க்க வேண்டும். ஒவ்வொரு நாளும் தத்தமது கடமையிலிருந்து தவறாமல் உழைக்க வேண்டும். வெளிநாடுகள் நமது உழைப்பினை சுரண்ட நினைத்தால் அவர்களைத் தடுக்கும் அணியில் நாமும் சேர்ந்துகொண்டு, அதன் தலைமையை வகித்து எதிரிகளை விரட்டியடிக்க வேண்டும் என்று கவிஞர் கூறியுள்ளார்.

# கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

## 'மனிதனாக வாழ்ந்திட வேணும்'

1. பொதுவுடைமைக் கவிஞர், மக்கள் கவிஞர் என அழைக்கப்படுபவர் யார்?

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

2. வாழ்க்கைக் குறிப்பு

பிறப்பு : ஏப்ரல் 13, 1930 : இறப்பு அக்டோபர் 8, 1959

ஊர் : செங்கப்படுத்தான்காடு

பெற்றோர் : அருணாசலனார் - விசாலாட்சி. இவர், தந்தை கவிபாடும் திறன் பெற்றவர்

சகோதரர் : கணபதிசுந்தரம் ; சகோதரி : வேதநாயகி

துணைவியார் : கௌரவாம்பாள்

இவர், தனது பத்தொன்பதாவது வயதிலேயே கவிபுனைவதில் அதிக ஆர்வம் காட்டியவர். தமது 29 ஆண்டு வாழ்வில் விவசாயி, மாடுமேய்ப்பவர், உப்பளத் தொழிலாளர், நாடக நடிகர் என 17 வகைத் தொழில்களில் ஈடுபட்டவர். இவருக்கு இருந்த நடிப்பாசையின் காரணமாக 'சக்தி நாடக சபா'வில் இணைந்தார். 'புரட்சிக்கவி' பாரதிதாசனிடம் உதவியாளராகச் சேர்ந்துவிட்டு இசையின் கவிஞராக உருவானார்.

3. இவருடைய பாடல்கள் எந்த இதழில் வெளிவந்தது?

ஜனசக்தி

4. உழவர்களின் வறுமையைப் பாடியவர் யார்?

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

⑥ 'எனது வலக்கை' என்று பாரதிதாசனால் புகழப்பட்டவர்?

பட்டுக்கோட்டையார்.

⑦ ஏழைகள் நாற்றத்: கரியவர் தெய்வத் என்றவர் யார்?

நாமக்கல் கவிஞர் அவார்.

⑧ ஆசையோடு பெற்றவருக்கு நீ தரும் மகிழ்ச்சி யாது?

உடலும் வளரணும் அறிவும் வளரணும் அது - தாண்ட வளர்ச்சி

அது தான் உன்னை பெற்றவருக்கு நீ தரும் மகிழ்ச்சி ஆகும்.

⑨ நரம்போடு பின்னி வளர்வது எது?

நரம்போடு பின்னி வளரணும் தன்மான உணர்ச்சி என்று கவிஞர் கூறியுள்ளார்.

⑩ வளரும் உலகத்துக்கு நீ எதுவாக இருக்க வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?

வளர்ந்து வரும் உலகத்துக்கே நீ வலது கையாக இருக்க வேண்டும் என்கிறார்.

⑪ எவை மாறுவதற்கு 'தொண்டு செய்யடா' என்று கவிஞர் கூறுகிறார்?

தனியுடைமைக் கொடுமைகள் தீரத் தொண்டு செய்ய வேண்டும். என்று கூறியுள்ளார்.

# கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

## 'மனிதனாக வாழ்ந்திட வேண்டும்'

1. பொதுவுடைமைக் கவிஞர், மக்கள் கவிஞர் என அழைக்கப்படுபவர் யார்?

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

2. வாழ்க்கைக் குறிப்பு

பிறப்பு : ஏப்ரல் 13, 1930 : இறப்பு அக்டோபர் 8, 1959

ஊர் : செங்கப்படுத்தான்காடு

பெற்றோர் : அருணாசலனார் - விசாலாட்சி. இவர், தந்தை கவி பாடும் திறன் பெற்றவர்

சகோதரர் : கணபதிசுந்தரம் ; சகோதரி : வேதநாயகி

துணைவியார் : கௌரவாம்பாள்

இவர், தனது பத்தொன்பதாவது வயதிலேயே கவிபுனைவதில் அதிக ஆர்வம் காட்டியவர். தமது 29 ஆண்டு வாழ்வில் விவசாயி, மாடுமேய்ப்பவர், உப்பளத் தொழிலாளர், நாடக நடிகர் என 17 வகைத் தொழில்களில் ஈடுபட்டவர். இவருக்கு இருந்த நடிப்பாசையின் காரணமாக 'சக்தி நாடக சபா'வில் இணைந்தார். 'புரட்சிக்கவி' பாரதிதாசனிடம் உதவியாளராகச் சேர்ந்துவிட்டு இறுதியில் கவிஞராக உருவானார்.

3. இவருடைய பாடல்கள் எந்த இதழில் வெளிவந்தது?

ஜனசக்தி

4. உழவர்களின் வறுமையைப் பாடியவர் யார்?

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

5. எனது வலக்கை என்று பாரதிதாசனால் புகழப்பட்டவர்?

பட்டுக்கோட்டையார்.

6. ஏழைகள் நாற்று: எளியவர் தெய்வம் என்றவர் யார்?

நாமக்கல் கவிஞர் ஆவார்.

7. இசையோடு என்றவருக்கு நீ தரும் மகிழ்ச்சி யாது?

அறமும் வளரணும் அறிவும் வளரணும் அது - தாண்ட வளர்ச்சி
அதுதான் உன்னை என்றவருக்கு நீ தரும் மகிழ்ச்சி ஆகும்.

8. நரம்போடு பின்னி வளர்வது எது?

நரம்போடு பின்னி வளரணும் தன்மான உணர்ச்சி என்று கவிஞர் கூறியுள்ளார்.

9. வளரும் உலகத்துக்கு நீ எதுவாக இருக்க வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?

வளர்ந்து வரும் உலகத்துக்கே நீ வலது கையாக இருக்க வேண்டும் என்கிறார்.

10. எவை மாய்வதற்கு 'தொண்டு செய்யடா' என்று கவிஞர் கூறுகிறார்?

தனியுடைமைக் கொடுமைகள் தீரத் தொண்டு செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

வரிகளை

'மனிதனாக வாழ்ந்திட வேண்டும்' எனும் பாடலின் பட்டுக்கோட்டையார் கூறும் கருத்துக்களை அறிக.

சிறு குழந்தைகளைப் பருவத்திலேயே நெறிப்படுத்தி வளர்க்க வேண்டும் சிந்திக்கும் திறனையும் வளர்க்க வேண்டும் தன்மான மிக்கவர்களாய் வாழ வேண்டும் என்ற அறிவுரையைக் குழந்தையாளேயே தெரியப்படுத்த வேண்டும் என்று கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் கூறுகிறார்.

சின்னப்பயலே சின்னப்பயலே சேதி கேளடா தான் சொல்லப்போகும் வார்த்தையை நல்லா எண்ணிப்பாரடா என்று தொடங்கி சிறுவர்கள் தான் நாட்டின் எதிர்கால தூண்கள் என்று அவர்களுடைய வளர்ச்சிக்கான அறிவுரையாக,

"ஆளும் வளரணும் அறிவும் வளரணும்
அதுதாண்டா வளர்ச்சி - உன்னை ஆசையோடு
ஈன்றவளுக்கு அதுவே நீ தரும் மகிழ்ச்சி"

என்றும்,

"நாளும் ஒவ்வொரு பாடம் கூறும் காலம் தரும்
பயிற்சி - உன் நரம்போடுதான் பின்னி வளரணும்
தன்மான உணர்ச்சி"

என்று தன்மான உணர்ச்சியுடைய மாணவனாக தமிழனாக, மறத்தமிழனாக விளங்க வேண்டுமென்கிறார் இதனை,

'மனிதனாக வாழ்ந்திட வேண்டும் மனதில் வையடா -
தம்பி மனதில் வையடா!
வளர்ந்து வரும் உலகத்துக்கே நீ வலது கையடா -
நீ வலது கையடா!

தனியுடைமைக் கொடுமைகள் தீரத் தொண்டு செய்யடா-

நீ தொண்டு செய்யடா!

தானா எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா!

எல்லாம் பழைய பொய்யடா"

என்று தனியுடைமை நீங்கி பொதுவுடைமைச் சிந்தனை பரவ வேண்டும் என்பதனை வலியுறுத்துகிறார்.

சிறுவர்களுக்கு அறிவுரை கூறும் இடத்தில், தனி உடைமை கொடுமைகள் தீரத் தொண்டு செய்ய வேண்டும் என்று தமது பொதுவுடைமைக் கொள்கையையும் பகுத்தறிவுச் சிந்தனையையும் குறிப்பிட்டுள்ளார்.

## 2. புதுக் கவிதை

"விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"

என்று தொல்காப்பியர் கூறும் வனப்பு எட்டில் ஒன்றான விருந்தின் நூற்பாவைக் காட்டி விருந்தில் அடக்கலாம் என்பர்.

முதன் முதலில் புதுக்கவிதை எழுதிய ஆங்கிலேயர் அமெரிக்காவைச் சேர்ந்த வால்ட் விட்மன்.

வால்ட் விட்மன் எழுதிய புதுக்கவிதை நூலின் பெயர் புல்லின் இதழ்கள் (Leaves of Grass)

தமிழில் முதன் முதலாகப் புதுக்கவிதை எழுத முயற்சி செய்தவர் பாரதியார்

பாரதிக்கு வழிகாட்டி வால்ட் விட்மன்

பாரதி எழுதிய புதுக்கவிதை 'காட்சி' என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளது

தமிழ்ப் புதுக்கவிதையின் முன்னோடி நா. பிச்சமூர்த்தி

முதன் முதலில் புதுக்கவிதை வெளியிட்ட இதழ் மணிக்கொடி

புதுக்கவிதை இதழ்கள்: மணிக்கொடி, எழுத்து, வானம்பாடி, ஞானரதம், இலக்கிய வட்டம், தாமரை, தீபம், வேள்வி, கணையாழி, கசடதபற, கஙய, ழ, ஃ, ஐ

எழுத்து இதழை 1959இல் தொடங்கியவர் க.நா. சுப்பிரமணியன்

வானம்பாடி: 1971இல் பல கவிஞர்கள் கூடிக் கோவையில் தொடங்கினார்கள்

புதுக்கவிதைக்குத் தொடக்கத்தில் இருந்த வேறு பெயர்கள்: உரைப்பா (பெருஞ்சித்திரனார்) உரைவீச்சு (சாலை இளந்திரையன்), சொற்கோலம் (கண்ணதாசன்) குறும்பா, பேச்சு நிலைப்பா, சுதந்திரப்பா, விடுதலைப்பா.

எழுத்துக் காலக் கவிஞர்கள்: பிச்சமூர்த்தி, தருமு சிவராமு, வைதீஸ்வரன், க.நா. சுப்பிரமணியம், பசவய்யா, வேணுகோபாலன், சி.சு. செல்லப்பா, நகுலன்

வானம்பாடிக் காலக் கவிஞர்கள்: தமிழன்பன், அப்துல் ரகுமான், மேத்தா, சிற்பி, சக்திக்கனல், வைரமுத்து, தேனரசன், புவியரசு, காமராசன், தமிழ்நாடன், கங்கை கொண்டான், இன்குலாப், அக்கினிபுத்திரன்.

எழுத்துக் காலக் கவிஞர்கள் அகநிலைக் கவிஞர்கள் ஆவர்.

வானம்பாடிக் காலக் கவிஞர்கள் புறநிலைக் கவிஞர்கள் ஆவர்.

மன உணர்வுகளை மிகுதியாகப் பாடியவர்கள் எழுத்துக் காலக் கவிஞர்கள்.

சமுதாய உணர்வுகளை மிகுதியாகப் பாடியவர்கள் வானம்பாடிக் காலக் கவிஞர்கள்

எழுத்துக் காலக் கவிஞர்கள் பெரும்பாலோர் யாப்பிலக்கணம் அறியாதவர்கள்.

வானம்பாடிக் காலக் கவிஞர்கள் பெரும்பாலோர் யாப்பிலக்கணம் அறிந்தவர்கள், பேராசிரியர்கள்.

யாப்பிலக்கணம் கற்று முதலில் மரபுக் கவிதை எழுதிப் பின் புதுக்கவிதை ஏழ்த வந்தவர்கள் வானம்பாடிக் காலக் கவிஞர்கள்.

புதுக்கவிதையில் கட்புலக் காட்சியை (சித்திரக் கவி அமைப்பு) மிகுதியாகப் பயன்படுத்திய கவிஞர் பா. உதயகுமார். (ஓர் அழகின் வெளிச்சம்)

புதுக்கவிதை இலக்கணம் என்ற நூலை எழுதியவர் இரா. இராசேந்திரன் (தேவிரா).

உரைநடை இலக்கியம்

தொல்காப்பியத்திற்கும் முன்பே தமிழில் உரைநடை இருந்த இதனை,

"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின்று எழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்
உரைவகை நடையே நான்கென மொழிப"

என்று வருவதால் அறியலாம்.

பாட்டிடை வைத்த குறிப்பு: இராம சரிதம், பாண்டவர் சரித சிலப்பதிகாரம் ஆகிய நூல்கள்.

பாவின்று எழுந்த கிளவி: நூலுக்கு எழுதப்பட்ட உரைகள் பொய்ம்மொழி, நகைமொழி இரண்டும் கதைகள்

"தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே"

என்று எண்வகை வனப்பில் ஒன்றான தொன்மை குறித்து தொல்காப்பியர் கூறியுள்ளார்.

உரையிடையிட்டப் பாட்டுடைச் செய்யுள் என்று சிலப்பதிகார குறிக்கப்படுகிறது

"உரையும் பாட்டும் உடையோர் சிலரே
மரையிலை போல மாய்ந்தோர் பலரே"

என்று புறநானூறு (27) கூறுகிறது

செய்யுளுக்கும் உரைநடைக்கும் இடைப்பட்ட நடையி எழுதப்பட்டவை மெய்க்கீர்த்திகள்.

அரசனின் வெற்றியையும் வீரத்தையும் கூறுவன மெய்க்கீர்த்திக

சிற்றிலக்கிய வகையுள் ஒன்று மெய்க்கீர்த்தி .

தொன்னூல் விளக்கம் தவிர மற்ற பாட்டியல் நூல்கள் மெய்க்கீர்த்தியைச் சிற்றிலக்கிய வகையுள் ஒன்றாகக் கூறுகின்றன.

"திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலம் அறுத்து அருளி,
வேங்கை நாடும் கங்கை பாடியும்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
முரட்டு எழில் சிங்களர் ஈழ மண்டலமும்
இரட்ட பாடி ஏழரை இலக்கமும்
முன்னீர்ப் பழந்தீவு பன்னீ ராயிரமும்
திண்திறல் வென்றித் தண்டாற் கொண்ட
தன்எழில் வளர்ஊழியுள் எல்லா யாண்டும்
தொழுதக விளங்கும் ஆண்டே செழியரைத்
தேசுகொள் கோ ராசகேசரி பன்மரான ஸ்ரீராசராச -
தேவர்க்கு யாண்டு இருப்பத்தொன்பது"

என முதலாம் ராஜராஜ சோழனின் மெய்க்கீர்த்தி வருகிறது.

தமிழில் தோன்றிய முதல் உரை: இறையனார் களவியலுக்கு நக்கீரர் எழுதிய உரை; இது 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

உரையை வளர்த்தவர்கள் சமணர்கள்

உரையை உரைநடையாக்கியவர்கள் கிறித்தவர்கள்

உரைநடையைத் தனி இலக்கியமாக வளர்த்தவர்கள் கிறித்தவர்கள்

உரைநடை என்ற வகை தோன்றிய முதல் மொழி தமிழ்

உரைநடையின் தந்தை வீரமா முனிவர். ராபர்ட்-டி-நோபிலி என்றும் சிலர் கூறுவர்.

உரையாசிரியர்கள் காலம் 13-18 நூற்றாண்டு

உரைநடை மறுமலர்ச்சிக் காலம் 19ஆம் நூற்றாண்டு

உரைநடையின் பொற்காலம் 20ஆம் நூற்றாண்டு

19ஆம் நூற்றாண்டின் 'உரைநடை இளவரசு' தாண்டவராய முதலியார்.

19ஆம் நூற்றாண்டின் 'உரைநடை வேந்தர்' ஆறுமுக நாவலர்

- இக்காலத் தமிழ் 'உரைநடையின் தந்தை' ஆறுமுக நாவலர்
- பழைய இலக்கண இலக்கியங்களுக்கு உரை எழுதி அவற்றை அழியாமல் காத்தவர்கள் உரையாசிரியர்கள்
- தமிழின் முதல் உரை ஆசிரியர் நக்கீரன்
- 'உரையாசிரியர்' என்று சிறப்பாகக் குறிக்கப்படுகிறவர் இளம்பூரணர்.